துணை ஆணையர்(மாவ) அலுவலகம்,

கடலூர் மாவட்டம், கடலூர்.

நாள்: 10 . 01.2023

மாப்பம்/கடித எண்.

/2811/2020

அரசாணை (டி) எண்.259, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள்:02.12.2022, இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

ஒம்/-சு.தேன்மொழி
துணை ஆணையர்(மாவ)
கடலூர்

பெறுநர்
திரு.இரா.ராஜசேகரன், இளநிலை உதவியாளர்,
மாநிலவரி அலுவலர் அலுவலகம், சிதம்பரம்-1,
(மாநிலவரி அலுவலர், சிதம்பரம்-1 மூலமாக)

நகல்
சம்பந்தப்பட்ட கணக்கு அலுவலர்
(மாநிலவரி அலுவலர், சிதம்பரம்-1 மூலமாக)

உண்மை நகல் / உத்தரவுப்படி

மாநிலவரி அலுவலர் / மேலாளர்

10/1/2023

//ந.க. அ2/258/2021//

அழிங்கப்படுகிறது

3/1/23

மாநில வரி அலுவலர்
சிதம்பரம் - 2.

3/1/23

மேலொப்பம்/கடித எண்.
அ2/10435/2020

இணை ஆணையர் (மாநிலவரி) அலுவலகம்,
வேலூர் கோட்டம், வேலூர்.

நாள்: 30.12.2022

அரசாணை (டி) எண்.259, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள்:02.12.2022 இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

60
09 JAN 2023

ஒம்/-சீ.பாலசுந்தர்
இணை ஆணையர்(மாநிலவரி)க்காக,
வேலூர் கோட்டம், வேலூர்.

பெறுநர்

திரு. இரா. ராஜசேகரன், இளநிலை உதவியாளர்,
வணிகவரி அலுவலர் அலுவலகம், சிதம்பரம்,
வேலூர் கோட்டம்.
(துணை ஆணையர் (மா.வ), கடலூர் மாவட்டம் மூலமாக)

நகல்

சம்பந்தப்பட்ட கணக்கு அலுவலர்
(துணை ஆணையர் (மா.வ), கடலூர் மாவட்டம் மூலமாக)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

30/12/22

துணைமாநிலவரி அலுவலர்/ மேலாளர்

30.12.22

| | |
|---|---|
| மேலொப்பம்/கடித எண். ஒய்–<br>3/1872020/2022–2 | வணிகவரி<br>ஆணையர் அலுவலகம்,<br>சென்னை – 5. |
| | நாள் 20.12.2022. |

15420-II
26 DEC 2022

அரசாணை (டி) எண்.259, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 02.12.2022 இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

ஒம்/– ப்பி. ரகுநந்தன்
துணை ஆணையர் (பொ.ப.)

பெறுநர்:
திரு இரா. ராஜசேகரன், இளநிலை உதவியாளர்,
வணிகவரி அலுவலர் அலுவலகம், சிதம்பரம்,
வேலூர் கோட்டம்
(இணை ஆணையர் (மா.வ), வேலூர் கோட்டம் மூலமாக)

நகல்:
இணை ஆணையர் (மா.வ), வேலூர் கோட்டம்,
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்,
(இணை ஆணையர் (மா.வ), வேலூர் கோட்டம் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 18
(இணை ஆணையர் (மா.வ), வேலூர் கோட்டம் மூலமாக)
இருப்புக்கோப்பு ஒய்–3.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

22/12/2022
கண்காணிப்பாளர்

22/12/22

ஆணையர் (வணிகவரிகள்)
15 DEC 2022
எழிலகம், சென்னை–600 005.

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – வேலூர் கோட்டம் – திரு இரா.ராஜசேகரன் என்பவர் கருணையடிப்படையில் 07.06.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (டி) எண்.259** — **நாள்: 02.12.2022**
**சுபகிருது , கார்த்திகை–16,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2053**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. இணை ஆணையரின் (மா.வ), வேலூர் கோட்டம் செயல்முறைகள் ந.க.எண்.அ2/10435/2020, நாள் 05.05.2021.
4. துணை ஆணையரின் (மா.வ), கடலூர் செயல்முறைகள் ந.க.எண்.அ1/2811/2020, நாள் 01.06.2021.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடிதம் எண்.ஒய்–3/ 1872020/2022, நாள் 10.05.2022.

*****

ஆணை:

வணிகவரித் துறையின் வேலூர் வணிகவரி கோட்டம், சிதம்பரம்–I வணிகவரி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தபோது 29.12.2018 அன்று மறைந்த திரு ப.இராஜேந்திரன் என்பவரின் மனைவி திருமதி. இரா.கலா என்பவர் தனது மகன் திரு இரா.ராஜசேகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 10.07.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் திரு இரா.ராஜசேகரன் என்பவரின் பிறந்த தேதி 17.02.1990, அரசு ஊழியர் காலமானபோது தனியரின் வயது 28 ஆண்டுகள் ஆகும். இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய

நிலையில் உள்ளது; அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்பதால், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி அளித்த விண்ணப்பத்தின் மீது விசாரணை மேற்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, மேலே மூன்றில் படிக்கப்பட்ட இணை ஆணையர் (மா.வ), வேலூர் கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு கடலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே நான்கில் படிக்கப்பட்ட துணை ஆணையர் (மா.வ), கடலூர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு இரா.ராஜசேகரன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டார். அதன்படி தனியர் வேலூர் கோட்டம், கடலூர் மாவட்டம், சிதம்பரம்-2 வணிகவரி அலுவலர் அலுவலகத்தில் 07.06.2021 முற்பகல் அன்று பணியேற்பு செய்துள்ளார். தனியரின் தற்காலிக பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 07.06.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு இரா.ராஜசேகரன், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே, வணிகவரித் துறையில், வேலூர் வணிகவரி கோட்டம், சிதம்பரம்-I வணிகவரி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்தபோது 29.12.2018 அன்று மறைந்த திரு ப.இராஜேந்திரன் என்பவரது மகன் திரு இரா.ராஜசேகரன் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரி அலுவலர், சிதம்பரம்-2 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 07.06.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அப்பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்

படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.13372/ட்டி-1/2022, நாள் 20.07.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.2842733/ஜி.1/2022, நாள் 03.08.2022 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:
திரு இரா.ராஜசேகரன், இளநிலை உதவியாளர்,
வணிகவரி அலுவலர் அலுவலகம், சிதம்பரம்.
வேலூர் கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)
நகல்:
இணை ஆணையர் (மாநிலவரி), வேலூர் கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5 வழியாக).
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை - 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(சு.சையத் காசிம்)
அரசு துணைச் செயலாளர்
7/12/2022